**கவனிக்க.**-*2024.05.10 ஆந் திகதிய இல.2384 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II , *பகுதி* IV(*அ*) )
*பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2385 - 2024 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2024.05.17**

*2385 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1302 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1307 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1304 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1305 | நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மே மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1301 - B 082570 - 5,403 (2024/05)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**
**இலங்கை நில அளவைத் திணைக்களம்**

விலைமனுக் கோரல்

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2024***

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2024.05.31ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | மாத்தறை | கம்புறுப்பிட்டிய | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், காலி | கம்புறுப்பிட்டிய நகர எல்லைக்கு அருகில் | *2024.10.03* |
| தென் மாகாணம் | அம்பாந்தோட்டை | திஸ்ஸ மஹாராம | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், காலி | திஸ்ஸமஹாராம நகரைச் சுற்றி | *2024.07.02* |
| மேல் மாகாணம் | கம்பஹா | ஜா-எல | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், கொழும்பு -05 | ஜா-எல நகரைச் சுற்றி | *2024.10.01* |
| மேல் மாகாணம் | கொழும்பு | கொழும்பு -01 | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், கொழும்பு -05 | மஹரகம நகரைச் சுற்றியுள்ள நகரங்கள் | *2024.07.01* |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.**- *அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள்*

இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2024.05.31ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

டபிள்யூ. சுதத் எல்.சீ. பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
இல.150, பெர்னாட் சொய்சா மாவத்தை, கொழும்பு 05,
2024.05.10.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2024**

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் - 2024

**கட்டிட உரிமையாளருக்காக :**

01. முழுப்பெயர் :--------------------------------------------------------------------------------------------------------.
02. முகவரி :------------------------------------------------------------------------------------------------------------.
03. தொலைபேசி இலக்கம் :-------------------------------------------------------------------------------------------.
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----------------------------------------------------------------------------.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :---------------------------------
--------------------------------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை ? :--------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :-------------------------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :-----------------------------------------
05. இடத்தின் விஸ்தீரணம் :-----------------------------------------------------------------------------------------------
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கையும் தொடர்பான விபரங்கள் :-----------------------
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-------------------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :------------------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) -------- :-----------------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :-----------------------------------------------------------------.
11. தொலைபேசி தொடர்பு உள்ளதா ? :------------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

05- 238

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- கல்முனை

### பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

கல்முனை மேல் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2024.05.29 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கல்முனை மேல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையான காலப்பகுதியினுள் இப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப்பொருட்களை ஏல விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கான அதிகாரம் இந்நீதிமன்றத்திற்கு உண்டு.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் பணத்தை உடனடியாக இந் நீதிமன்றத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அப் பொருட்களை நீதிமன்ற வளாகத்தை விட்டும் உடனடியாக அப்புறப்படுத்தல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவிதமான முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளிப்பது அவசியமாகும்.

மேல் நீதிமன்ற நீதிபதி.

மேல் நீதிமன்றம்,
கல்முனை,
2024.04.29.

### ஏல விற்பனை செய்யப்படும் பொருட்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு

| தொ.இல. | வழக்கு இல. | வாகனப் பதிவு இல. | பொருட்கள் தொடர்பான விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | EP/ HCK/ 591/ 2020 | EP- BCI- 7334 | பல்சர் ரக மோட்டார் சைக்கிள் (Pulsar -150) | 01 |
| 02 | EP/ HCK/ 668/ 2022 | 6 SRI 5307 | பியுஜிஒட் ரக மோட்டார் கார் | 01 |

05- 143

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு கோட்டைமுனை TT- 2 ஆம் இலக்க கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

*2024 யூலை – 2025 யூன்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டு கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின் படி, மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைமுனை கள்ளுத்தவறணைக்கான 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, யூன் மாதம் 30ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் இரண்டாயிரம் ரூபா (ரூபா 2,000.00) பணத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் என்ற பெயரில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டின் பிரதியையும், பெறுமதிச்சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2024.05.17ஆந் திகதி முதல் 2024.06.11 ஆந் திகதி முற்பகல் 11.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழின் மூலப் பிரதி கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் இப்பெறுமதிச் சான்றிதழுடன் காணிப் பதிவாளரினால் வழங்கப்படும் காணி வரலாற்றுச் சுருக்கப்பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ( இது கேள்விப்பத்திரம் விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்குப் பிந்திய தினத்தில் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

3. கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் கடித உறையினுள் தங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் பிரதிகளை இன்னுமொரு கடித உறையினுள் இட்டு அதனை மூடி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தாலும், மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படாமலிருந்தாலும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பிச் சமர்ப்பிப்பின் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

6. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

7. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தக் குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012/01/05 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

8. ஏனைய விபரங்களை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வ. வாசுதேவன்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு.

**அட்டவணை**

**கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும்/ நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் | TT No. 2 | 2024.06.11 | பி.ப. 1.00 மணி |

குறிப்பு.- 1. கேள்விச் சபை 2024.06.11 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்குக் கூடும்.
2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2024.06.18 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

5-202

---

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மாங்காடு, எருவில் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை - 2024, யூலை - 2025, யூன்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207ஆம் இலக்கமுடைய 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாங்காடு, எருவில் கள்ளுத்தவறணைகளுக்கான 2024, யூலை 01 ஆந் திகதி முதல் 2025, யூன் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி நேரம் வரை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை தென் எருவில்பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு (ரூபா 1,500.00) ரூபா பணத்தை, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற முடியும். கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2024.05.30ஆந் திகதி முதல் 2024.06.18 ஆந் திகதி பி.ப. 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளர்களினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது, கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்குக் கட்டிய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பிச் சமர்ப்பித்தால் அக் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள், இந்தக் குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்று நிருபத்திற்கு அமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(திருமதி)சிவப்பிரியா வில்வரத்னம்,
பிரதேச செயலாளர்,
மண்முனை தென் எருவில் பற்று.

பிரதேச செயலகம்,
மண்முனை தென் எருவில் பற்று,
களுவாஞ்சிக்குடி,
2024, மே மாதம்.

**அட்டவணை**

கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணையின் பெயர் | தவறணையின் இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| மாங்காடு கிராமம் | மாங்காடு | TT No. 4 | 2024.06.19 | மு.ப. 11.00 மணி |
| எருவில் கிராமம் | எருவில் | TT No. 6 | 2024.06.19 | மு.ப. 11.00 மணி |

**குறிப்பு**.- 1. கேள்விச்சபை 2024.06.19ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு கூடும்.

2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2024.06.28ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு நடைபெறும்.

05- 215

---

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## LOLC ஃபைனான்ஸ் பீஎல்சீ கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பு)

LOLC ஃபைனான்ஸ் பீஎல்சீ (நிறுவனம்) அதன் கூறப்பட்ட மூலதனம் முந்நூற்று ஆறு பில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூன்று மில்லியன் எட்டு இலட்சத்து ஐயாயிரத்து ஐந்நூற்று ஒரு ரூபா(ரூ.306, 993, 805,501.00) ஐ நாற்பத்து நான்கு பில்லியன் எழுபத்தெட்டு மில்லியன் தொள்ளாயிரத்து பதினைந்தாயிரத்து எண்ணூற்று ஐம்பத்திரண்டு ரூபா (ரூ.44,078, 915,852.00) ஆகக் குறைப்பதற்கு அதன் இணைப்பு இருப்புக்கணக்கில் இருக்கும் இருநூற்று அறுபத்திரெண்டு பில்லியன் தொள்ளாயிரத்து பதினான்கு மில்லியன் எண்ணூற்று எண்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று நாற்பத்தொன்பது ரூபா (ரூ. 262,914,889,649.00) ஐ மேலே குறிப்பிடப்பட்ட முந்நூற்று ஆறு பில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூன்று மில்லியன் எட்டு இலட்சத்து ஐயாயிரத்து ஐந்நூற்று ஒரு ரூபா (ரூ.306, 993,805,501.00) மூலதனத்திற்கு எதிராக தள்ளுபடி செய்ய முன்மொழிகிறது. நிறுவனத்தின் பங்குகளின் எண்ணிக்கை மாறாமல் இருக்கும்.

சபையின் கட்டளைப்படி,

(திருமதி) எம். வி. எஸ். சி. ரொட்ரிகோ,
நிறுவன செயலாளர்.

LOLC ஃபைனான்ஸ் நிறுவனம்,
2024, மே 13.

05-246

## ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தல்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் ஐகியுவியா சொலூஷன்ஸ் லங்கா ( பிறைவட்) லிமிடட் ஆகிய நிறுவனம் குவின்டயில்ஸ் லங்கா ( பிறைவட் ) லிமிடட் என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

*ஐகியுவியா சொலூஷன்ஸ் லங்கா ( பிறைவட்) லிமிடட் ( கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 3165) என்ற நிறுவனம் குவின்டயில்ஸ் லங்கா ( பிறைவட்) லிமிடட் ( கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 77874 ) ஆகிய நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) (அ) பிரிவின் நியதிகளின் கீழ் கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.*

*இவ் ஒன்றிணைப்பானது2024, மாச்சு 01 ஆந் திகதியன்று அமுலுக்கு வருகின்றதோடு மேற்கூறப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள் 2024, மாச்சு 01 ஆந் திகதியில் இருந்து ஐகியுவியா சொலூஷன்ஸ் லங்கா ( பிறைவட்) லிமிடட் என தொடரும்.*

எஸ்.எஸ்.பி. கோபரேட் சேர்விசஸ்
(பிரைவேட்) லிமிடட்,
செயலாளர்கள்,
ஐகியுவியா சொலூஷன்ஸ் லங்கா
(பிறைவட்) லிமிடட்.

*05-185*

---

## நிலோனா லங்கா ( பிரைவேட்) லிமிட்டெட்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கமைய கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்:* நிலோனா லங்கா ( பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்:* பீவீ 14543
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி:* ஒருவல, அதுருகிரிய
*குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம்:* ரூ.732,000,020.00
*குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம்:* ரூ.618,600,020.00
*குறைக்கப்பட்ட பெறுமானம்:* ரூ.113,400,000.00

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்.
எஸ் என் லோ கார்ப்பரேட் செக்ரட்டரீஸ்
( பிரைவேட்) லிமிட்டெட்,
(கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்).

எச் கியூ கொழும்பு ( நிலை 4),
இல. 464ஏ, டிபி.ஜாயா மாவத்தை,
கொழும்பு -10.

*05-156*

## லன்வா சன்ஸ்தா சிமெண்ட் கார்ப்பரேஷன் ( பிரைவேட்) லிமிட்டெட்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கமைய கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்:* லன்வா சன்ஸ்தா சிமெண்ட் கார்ப்பரேஷன் ( பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்: பீவீ 125667*
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி:* ஒருவல, அதுருகிரிய
*குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம்: ரூ.18,335,451,000.00*
*குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம்: ரூ.17,935,451,000.00*
*குறைக்கப்பட்ட பெறுமானம்: ரூ.400,000,000.00*

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்.
எஸ் என் லோ கார்ப்பரேட் செக்ரட்டரீஸ்
( பிரைவேட்) லிமிட்டெட்,
(கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்).

எச் கியூ கொழும்பு ( நிலை 4),
இல. 464ஏ, டிபி.ஜாயா மாவத்தை, கொழும்பு -10.

*05-157*

---

## நிலோனா லொஜிஸ்டிக்ஸ் ( பிரைவேட்) லிமிட்டெட்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கமைய கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்:* நிலோனா லொஜிஸ்டிக்ஸ் ( பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்: பீவீ 00207201*
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி:* ஒருவல, அதுருகிரிய
*குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம்: ரூ.276,901,000.00*
*குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம்: ரூ.174,501,000.00*
*குறைக்கப்பட்ட பெறுமானம்: ரூ.102,400,000.00*

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்.
எஸ் என் லோ கார்ப்பரேட் செக்ரட்டரீஸ்
( பிரைவேட்) லிமிட்டெட்,
(கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்).

எச் கியூ கொழும்பு ( நிலை 4),
இல. 464ஏ, டிபி.ஜாயா மாவத்தை, கொழும்பு -10.

*05-158*

## அறிவித்தல்

## பேருவள ரிசோட்ஸ் பீஎல்சீ ( Company No. PB 1091 PQ) கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்பு

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 ஆவது பிரிவு மற்றும் நிறுவனத்தின் அமைப்பு அகவிதிகளின் 13(2)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எழுநூறு மில்லியன் ஐந்நூற்று நாற்பத்து நான்கு ஆயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஐந்து (700, 544, 295.00) முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா நானூற்று அறுபது மில்லியன் அறுநூற்று ஐம்பத்து மூன்று ஆயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு ( ரூபா460,653,154.00) நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனத்தை எழுநூறு மில்லியன் ஐந்நூற்று நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஐந்து (ரூபா700,544,295.00) முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா நூற்று இருபது மில்லியன் (ரூபா 120,000,00) குறைக்கப்பட வேண்டும் என அதன் பங்குதாரர்களுக்கு பரிந்துரைப்பதற்கு பேருவள ரிசோட்ஸ் பீஎல்சீ ( நிறுவனம்) பணிப்பாளர்கள் சபையால் தீர்க்கப்பட்டது என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.*

*(2023, மாச்சு 31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டுக்காக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதி அறிக்கையின்படி) 2023, மாச்சு 31ஆந் திகதி நிறுவனத்தின் திரண்ட இழப்பு ரூபா நானூற்று எழுபது மில்லியன் தொள்ளாயிரத்து மூவாயிரத்து முந்நூற்று பதினெட்டு (ரூபா470,903, 318.00) ஆக இருப்பதோடு மேற்கூறிய அவ்வாறான குறைப்பு நிறுவனத்தின் முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் செய்யாது ரூபா முந்நூற்று நாற்பது மில்லியனே அறுநூற்று ஐம்பத்து மூவாயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு (ரூபா340,653,154.00) அளவான அதன் கூறப்பட்ட மூலதனத்திற்கு எதிரான நிறுவனத்தின் திரண்ட இழப்புகளை நீக்குவதன் மூலம் செயற்படுத்தப்படுவதோடு, அதன் விளைவாக திரண்ட இழப்புகள் ரூபா நூற்று முப்பது மில்லியன் இருநூற்று ஐம்பதாயிரத்து நூற்று அறுபத்து நான்காக (ரூபா 130,250,164.00) குறைக்கப்படும்.*

*கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்புக்காக விசேட தீர்மானம் ஒன்றுக்கு பங்குதாரர்களின் ஒப்புதலை பெறும் நோக்கில் 2024, யூலை 19 ஆந் திகதி அதிவிசேட பொதுக் குழு கூட்டம் ஒன்றை நிறுவனம் கூட்டவுள்ளது.*

*சபையின் ஆணைப்படி,*

*கோர்பரேட் மனேஜர் அன்ட் செக்ரடரீஸ்*
*(பிறைவேட்) லிமிடட்,*
*பேருவள ரிசோர்ட்ஸ் பீஎல்சீ,*
*செயலாளர்கள்.*

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 8-1/3, யோர்க் ஆர்கெட் கட்டிடம்,*
*லெய்டன் பஸ்டியன் வீதி, கொழும்பு -01.*

*05-167*